12th March 1965]

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, மாவட்டம் ஒன்றுக்குக் குறைந்தது ஒன்றிரண்டாவது பெரும் தலைவர்களுக்காக ரிஸர்வ் சீட் ஒதுக்கவேண்டுமென்று சர்க்கார் அபிப்பிராயம் தெரிவித்ததா? அப்படி என்றால் அவர்கள் என்ன முடிவு சொன்னார்கள் ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அம்மாதிரி விவரம் பரிசீலித்ததாக எனக்கு ஞாபகம் இல்லை.

திருச்சிராப்பள்ளி நகராட்சிமன்ற உறுப்பினர்களுக்குப் படி வழங்குவது பற்றிய தீர்மானம்

*221 கேள்வி.—**திரு. எஸ். முருகையன் :** (திரு. மு. கருணாநிதி சார்பில்) : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நகராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு அலவன்ஸ் தரவேண்டுமென்று திருச்சி நகராட்சியிடமிருந்து அரசாங்க அனுமதிக்காக தீர்மானம் ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன்பேரில் எடுத்த நடவடிக்கை என்ன ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) and (இ) பாராளுமன்ற உறுப்பினர்கட்கும், சட்ட மன்ற உறுப்பினர்கட்கும் மாதந்தோறும் படி கொடுப்பதைப் போலவே திருச்சிராப்பள்ளி நகராட்சி மன்ற உறுப்பினர்கட்கும் கொடுக்க வேண்டுமென்று திருச்சிராப்பள்ளி நகராட்சி மன்றம் பிரேரணை கொண்டு வந்தது. 1920-ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்கீழ், அவ்வாறு படி கொடுப்பதற்கு அனுமதி இல்லையாதலால், அந்தப் பிரேரணையை ஏற்றுக்கொள்வதற்கு இடமில்லை.

கரம்பக்குடி நகரப் பஞ்சாயத்து எழுத்தருக்கெதிரான வழக்கு

*222 கேள்வி.—**திரு. பி. முருகையன்:** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கரம்பக்குடி நகரப் பஞ்சாயத்தில் போலீஸ் நடவடிக்கை மூலம் அங்கு பணிபுரிந்த எழுத்தர் சம்பந்தப்பட்ட வழக்கு சர்க்காருக்குப் பாதகமாக உள்ளது உண்மையா ?

(இ) அவ் வழக்கை சர்க்காரே எடுத்துக்கொள்ளவேண்டி மனுக்கள் வந்தனவா ?

(உ) ஆமெனில், துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படுமா ?

கனம் திரு சே. ம. அ. மஜீத் : (அ) கரம்பக்குடி பஞ்சாயத்து முன்னாள் குமஸ்தா திரு. சி. சோமசுந்தரம் என்பவருக்கு புதுக்கோட்டை உதவி செஷன்ஸ் நீதிபதி மூன்றாண்டுக் கடுங்காவல் தண்டனை விதித்தார். அப்பீலில் திருச்சி ஜில்லா செஷன்ஸ் ஜட்ஜ் அவரை விடுதலை செய்தார். எனினும் அவர்மீது இலாகா ரீதியில் நடவடிக்கை எடுத்துக்கொண்டு, கரம்பக்குடி பஞ்சாயத்து நிர்வாக அதிகாரி அவரை வேலையிலிருந்து நீக்கிவிட்டார்.

(இ) இல்லை.

(உ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. முருகையன் : தலைவர் அவர்களே, இந்த வழக்கு போலீஸாரால் தொடரப்பட்டது. நிர்வாகத்தால் ஏன் தொடரப்படவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு சே. ம. அ. மஜீத் : போலீஸார் கவனத்திற்குக் கொண்டு வந்து அவர்கள் பதிவு செய்திருக்கலாம். நிர்வாக சம்பந்தப்பட்டவர்களும் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். அதனால்தான் இவர்கள் இருவரும் ஸஸ்பெண்ஷனில் இருக்கிறார்கள்.

திரு. பி. முருகையன் : அவர்களுக்கு மீண்டும் உத்தியோகம் கொடுக்கவேண்டுமென்று சர்க்கார் உத்திரவு பிறப்பித்தது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு சே. ம. அ. மஜீத் : அம்மாதிரி உத்திரவு ஒன்றும் பிறப்பிக்கவில்லை. அந்தப் பிரச்சினை பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[Note— An asterisk (*) at the Commencement of a speech indicates revision by the Member.]

II.—GOVERNMENT MOTIONS.

(1) Election to the House Committee.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I move—

'That, with reference to Rule 221 (1) of the Madras Legislative Assembly Rules, this Assembly do proceed on a date to be fixed by the Hon. Speaker to elect eleven members to be members of the House Committee for the financial year 1965–66'.

The motion was put and carried.

MR. SPEAKER : In accordance with the regulations framed by me for the holding of elections according to the principle of proportional representation by means of the single transferable vote, I fix 11 a.m. on the 15th March 1965 as the time and date within which nomination papers of candidates for election to the House Committee should reach the Secretary. Nomination forms can be had on application to the Secretary.

The nomination papers will be taken up for scrutiny at 3 p.m. on the 15th March 1965. I also fix 3 p.m. on the 17th March 1965 as the last hour and date for the withdrawal of candidature.

If the number of candidates nominated exceeds the number of seats to be filled, namely, eleven, a poll will be taken on the 20th March 1965 between the hours of 10 a.m. and 12 noon.

(2) Election to the Committee of Privileges.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I move—

'That, with reference to Rule 183 of the Madras Legislative Assembly Rules, this Assembly do proceed, on a date to be fixed by the Hon. the Speaker, to elect fifteen members to be members of the Committee of Privileges for the financial year 1965–66'.

The motion was put and carried.

MR. SPEAKER : In accordance with the regulations framed by me for the holding of elections according to the principle of proportional representation by means of the single transferable vote, I fix 11 a.m. on 15th March 1965 as the time and date within which nomination papers of candidates for election to the Committee of Privileges should reach the Secretary. Nomination forms can be had on application to the Secretary.